5 - SEP 1981

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1981 மார்ச் 25.

பங்குனி 11, சௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. இரங்கற் குறிப்பு.

மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. கே. கமலக்கண்ணன் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, திரு. கே. கமலக்கண்ணன், மேலவை முன்னாள் உறுப்பினர், சென்னையில் 24—3—1981 அன்று இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கே. கமலக்கண்ணன் அவர்கள் 1960 முதல் 1966 வரை சென்னை-செங்கற்பட்டு-வட ஆற்காடு உள்ளாட்சித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு மேலவை உறுப்பினராக இருந்தார். 1958-59-ல் சென்னை நகர மேயராக இருந்தார். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ரூபாய் 10,000 அளித்தல்

* 161 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) அரசு ஊழியர் பணியில் இருக்கும்பொழுது மரணமடைந்தால், அவருடைய குடும்பத்தினருக்கு ரூ. 10,000 வழங்கும் திட்டத்தின்படி, திட்ட ஆரம்பத்திலிருந்து 15—6—1980 வரை, எத்தனைக் குடும்பங்களுக்கு அந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது ?

(இ) இத்திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் உதவி செய்கிறதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இத்திட்ட ஆரம்ப காலத்திலிருந்து 30—6—1990 வரை 12,964 உரிமைக் கோரிக்கைகள் வரப் பெற்று தீர்க்கப்பட்டுள்ளன.

(இ) பெறப்படவில்லை.

(உ) வினா எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டமானது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மாதந்தோறும் ஒரு ரூபாய் அளிப்பது என்ற அடிப்படையிலே திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்துடன் தமிழக அரசு இணைந்து இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறதா அல்லது இந்தத் திட்டத்தினால் பயனடையக்கூடிய ஊழியர்களுக்கு அரசே தன்னுடைய நிதியிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஊழியர்கள் குடும்பத்தைப் பொறுத்தவரையில், பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசாலே தேவையாக வழங்கப்படுகிறது. உள்ளாட்சித் துறை ஊழியர்கள், அரசு மானியம் பெற்று நடத்தப்படும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழக உதவியோடு கூட்டு உதவித் திட்டம் (குரூப் இன்ஷூரன்ஸ் திட்டம்) செயல்பட்டு வருகிறது. இதன்படி உள்ளாட்சித் துறை ஊழியர்களும் இதில் கலந்து கொண்டு மாதந்தோறும் ஒரு ரூபாய் செலுத்தி, பணிக்காலத்திலே அவர்கள் இறக்க நேரிட்டால், முழுத் தொகையான பத்தாயிரம் ரூபாயை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து பெறுகிறார்கள். அதற்காக அரசு ஆண்டு ஒன்றுக்கு 150 இலட்சம் ரூபாயைப் பிரிமியமாகச் செலுத்தி வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதே திட்டத்தின் அடிப்படையிலே ஓய்வு பெறும்போதுகூட உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஊழியர்கள் கேட்டார்கள். மாதந்தோறும் இரண்டு ரூபாயை ஒவ்வொரு அரசு ஊழியரும் செலுத்துவதாக இருந்தால், மொத்தமுள்ள ஏழரை இலட்சம் ஊழியர்கள் மாதம் ஒன்றுக்கு 15 இலட்சம் ரூபாயைச் செலுத்துவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 1.80 கோடி ரூபாய் அரசுக்கு வரும். இதற்கு அரசும் தன்னுடைய பங்கைச் செலுத்தினால், அதிலிருந்து வரும் வட்டித் தொகையைக் கணக்கிட்டால், அரசு இதை எளிதாகச் செயல்படுத்தலாம்

1981 மார்ச் 25]

என்று ஏற்கெனவே எடுத்துச் சொன்னோம். அதைப்பற்றி ஆராய்வோம் என்று அப்போதிருந்த நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் சொன்ன கருத்தைப் பற்றி ஆராய்வோம் என்று சொன்ன அந்தக் கருத்து அரசாலே ஆராயப்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் அதன் மீது என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இங்கே நான் ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறேன். இது குறித்து ஒரு திட்டத்தை வகுத்தபோது, அரசு ஊழியர்களும், மற்றவர்களும் ஒத்துவராததால், அதை நிறுத்தி வைக்கும்படி நேரிட்டது. மறுபடியும் உடன்பாட்டுக்கு வந்து எந்த அளவிற்கு அரசாங்கம் பங்கீட்டைச் செலுத்துவது, எந்த அளவிற்கு அவர்கள் செலுத்துவது என்ற முறை வகுக்கப்பட்டால், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். அதற்கான ஏற்பாடுகளைக் குறித்து சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும், தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் ஆகியோரும் கலந்து பேசி முடிவு எடுக்கலாம் என்று எடுத்துரைக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாக, முடிவு எடுப்பதன் மூலமாக இந்தத் திட்டத்தை வகுக்கலாம்.

செல்வி அ. லீலாவதி : அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது மரணம் அடைந்தால், அவர்களுடைய குடும்பத்தினருக்குப் பத்தாயிரம் ரூபாயைக் கொடுப்பதில் அதிக நாட்கள் ஆகின்றன. சில நேரங்களில் பல்லாண்டுகள் கழித்துகூட கொடுக்கப்படுகின்றது என்ற புகார் வருகிறது. ஆகவே, இத்தொகையை வழங்குவதில் உள்ள காலதாமதத்தைத் தவிர்த்து விரைவிலே கொடுக்க ஏதாவது அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தத் தொகையை விரைவிலே தர வேண்டும் என்பதுதான் அரசின் ஆணை. எந்த ஐயப்பாட்டிற்கும் இடமில்லாமல் இருக்குமானால், உடனடியாகத் தந்து விடுகிறார்கள். சிலபல நேரங்களில், சிலபல தகவல்களைச் சேகரிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட காலத்தாழ்வும் நீண்ட காலம் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மரணம் அடைந்தவர்களின் குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே கிராம அதிகாரிகளாக இருந்தவர்கள் இதிலே ஈடுபடுத்தப்பட்டு, அவர்களிடமிருந்து மாதந்தோறும் ஒரு ரூபாய் வீதம் பிடிக்கப்பட்டது. இப்போது அவர்கள் தங்களுடைய பதவியை இழந்திருக்கிறார்கள். இதுவரை பணிபுரிந்த 24 ஆயிரம் பேரும் தாங்கள் தொடர்ந்து பணியில் இருப்போம் என்ற

நம்பிக்கையில் இத்திட்டத்தில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் பதவியில் இல்லை. ஆகவே அதை அவர்களுக்குத் திருப்பித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது திருப்பித் தரும் நிலை இல்லை. பணி முடிவு ஏற்பட்டதற்குப் பிறகு, திருப்பித் தருவதற்குரிய சூழ்நிலை ஏற்படாது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : ரொக்கமாகக் கொடுத்தால், அதைச் சீக்கிரமாகச் செலவழித்துவிட்டு அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்தத் தொகையை பிக்செட் டிப்பாசிட்டில் போட்டுக் குறைந்தது ஐந்து வருடங்களுக்கு எடுக்க முடியாத அளவிற்கு ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது வாங்குபவர்களின் நிலையைப் பொறுத்தது. சிலபேர் மொத்தமாக வாங்குவதைத்தான் விரும்புவார்கள். அப்படிப்பட்ட கோரிக்கைகள் வருமானால், அதை வைத்து முடிவு செய்யலாம். இப்போது முழுத் தொகையையும் வாங்குகிற தன்மையைத் தான் மேற்கொண்டிருக்கிறோம்.

ஆசிரியர்களின் சம்பள வீதங்கள்.

* 162 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோரின் கல்வித் தகுதி, வேலைத்திறன் அடிப்படையில், மூன்றாவது தமிழ்நாடு ஊதியக் குழு, அவர்களுடைய ஊதியத்தை நிர்ணயிக்கவில்லை என்றும் இக்குறைபாட்டை நிவர்த்திக்குமாறும், பல்வேறு ஆசிரியர் சங்கங்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கைகள் திரு. சி. வி. ஆர். பணிக்கர், இ.அ.ப. அவர்களின் தலைமையிலான ஒரு நபர் குழுவின் ஆய்வுக்கு விடப்பட்டன. அக்குழு இவ்வூதிய விகிதங்களில் முரண்பாடு எதும் இல்லை என்று கூறி ஏற்கெனவே உள்ள ஊதிய விகிதங்கள் சரியானவையே என்று அறிவித்திருக்கிறது.